[*1996 பிப்ரவரி 23*

105--

ஆலங்குளம் ஒன்றியத்தில் தாய்சேய் நல விடுதி

20716*--திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், மருக்காலன்குளம் கிராமத்தில் தாய்சேய் நல விடுதி கட்டி இருந்தும் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகச் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆலங்குளம் ஒன்றியம், மருக்காலன்குளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஊரக வளர்ச்சித் துறையினால் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளது. இன்னும் சுகாதாரத் துறைக்கு ஒப்படைக்கப்படவில்லை. தற்போது இத்துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏற்கனவே அங்கே தாய் சேய் நல விடுதி இருக்கிறது என்று சொன்னார்கள். அது செயல்படாமல், பல ஆண்டுகளாக, ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் அல்ல – சும்மாவே இருக்கிறது. இப்போது அதைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு அது இருக்கிறது. ஏன் அப்படிப்பட்ட நிலை வந்தது? அது ஏன் உங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. உங்கள் கையில் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறீர்களே, அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஊரகத்துறையால் கட்டப்பட்டிருக்கிறது. அது என்ன காரணத்தாலோ, நல்வாழ்வுத்துறைக்கு ஒப்படைக்கப்படாமல்

1996 பிப்ரவரி 23]

இருந்திருக்கிறது. இப்போது இந்தக் கேள்வி எனக்கு வந்தவுடனே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்து, உடனடியாக அந்தக் கட்டிடத்தை இந்தத் துறைக்கு எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று நான் தெரிவித்து இருக்கிறேன். விரைவாக அந்த நடவடிக்கை எடுக்கபபடும் என்று நான் நம்புகிறேன். அதேநேரத்திலே அங்கே துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் நடந்து வருவதாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். எனவே, பணி முடங்கிவிடுவதற்கான எந்தச் சூழ்நிலையும் இல்லை. ஆனால் கட்டப்பட்ட கட்டிடம் பயன்படுத்தப்படாமல் இருந்து இருக்கிறது என்பது உண்மை. ஆகவே அதை உடனடியாக பயனுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

முற்பகல் 10-15

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று இந்த தாய் சேய் நல விடுதிகள் கட்டும்போது கிராமங்களிலே ஒரு 'ரிமோட் கார்னர்'-லே அந்த ஊர் மத்தியிலே கட்டாமல் ஏதாவது ஒரு பகுதியில் கொண்டுபோய் கட்டுவதனால், அந்தப் பகுதிக்கு தாய்மார்கள் மகப்பேறுகளுக்கு எல்லாம் செல்லும்போது பயப்படக்கூடிய, அச்சப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனால் இதுபோன்ற கட்டிடங்கள் கட்டும்போது அந்த ஊருக்கு அருகாமையில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரின் அருகாமையில் இன்னும், ஊருக்கு மத்தியிலேதான் கட்டப்படவேண்டுமென்பது அரசினுடைய நோக்கம். ஆனால் இடம் கிடைப்பதில்லை. பல நேரங்களிலே கட்டிடம் கட்ட வேண்டுமென்று நாம் பார்க்கிறபோது இடம் கிடைப்பது கிடையாது. தனியாரிடத்திலேயிருந்து இடத்தை எடுப்பது என்றால் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. எனவே எங்கெங்கே அரசு நிலம் சொந்தமாக இருக்கிறதோ, அரசுக்கு இருக்கிற நிலத்திலே எடுத்துக் கட்டுகின்ற நடவடிக்கை எடுக்கிறார்கள். எனவே இப்படி சில ஊர்களில் தள்ளிப் போகிற நிலைமை ஏற்படுகிறது. இருந்தாலும் ஏற்கெனவே இதைப் பற்றி துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. சாதாரணமாக அங்கே வரக்கூடிய தாய்மார்கள் அதுவும் இரவு நேரத்திலேதான் அவர்கள் வருகிற சூழ்நிலை அதிகமாக இருக்கும் என்பதை மனதிலேகொண்டு, ஊருக்கு அருகாமையில் இன்னும் ஊருக்கு மத்தியிலே கட்டுகிற முயற்சியைத்தான் எடுக்கவேண்டுமென்று ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

[*1996 பிப்ரவரி 23*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

106--

ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக்குதல்

****61947---திரு. எஸ். ஆசைமணி:***

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், திருவிழிமிழலை ஊராட்சியிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் திருவிழிமிழலை ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற இந்த திருவிழிமிழலை ஆரம்ப சுகாதார நிலையம் இதற்கு முன்னாலே அரசு மருந்தகமாக இருந்து, அதற்குப் பின்னாலே அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாறி இருக்கின்ற காரணத்தால் அங்கே சில அடிப்படை வசதிகள் குறைந்து இருக்கின்றன என்று அங்கே இருக்கின்ற மக்கள் அங்கே சென்ற நேரத்திலே என்னிடம் அதை ஒரு குறையாகச் சொன்னார்கள். எனவேதான் இந்தக் கேள்வியை நான் இங்கே கேட்டிருந்தேன். ஆகவே மீண்டும் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை, அரசு மருத்துவமனையாக அல்லது அரசு மருந்தகமாக மாற்றித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையம், அதேபோல் அரசு மருந்தகம் இந்த மூன்றுக்கும் நிறைய பேறுபாடுகள் உண்டு. ஆனால் அரசு மருந்தகம் என்பது அவ்வளவு பெரிய